பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper


# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 மாசி 12 திங்கட்கிழமை (24-02-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 89


# ஐ. நாவின் மத்தியஸ்தத்துடனேயே பேச்சுவார்த்தை என்கிறார் பிரபா

## குடாநாடு மீது தாக்குதல் நடந்தால் அது ஈழம் காண உத்வேகமாகும்

கொழும்பு, பெப்ரவரி 24

அரசாங்கத்துடன் விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தை நடத்துவதாக இருந்தால், அது ஐக்கிய நாடுகள் சபையின் மத்தியஸ்தத்துடனேயே நடக்க வேண்டும்.

எந்த ஓர் உடன்பாடும் ஐ. நா. சபையின் மத்தியஸ்தத்தின் கீழேயே எட்டப்பட வேண்டும்.

இவ்வாறு வலியுறுத்தி இருக்கிறார் விடுதலைப் புலிகள் தலைவர் திரு. பிரபாகரன்.

கொழும்பில் இருந்து வெளிவரும் "சண்டே ஐலண்ட்" பத்திரிகைக்கு அளித்த விசேட பேட்டியில் அவர் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

யாழ்ப்பாணத்தின் மீது இலங்கை அரச இராணுவம் பெருந்தாக்குதலை நடத்துமானால், அது தனிநாடு அமைக்கும் எமது இலட்சியத்துக்கு மேலும் உத்வேகமும் உந்துதலும் தருவதாகவே அமையும்—என்றும் திரு. பிரபாகரன் தமது பேட்டியில் தெரிவித்திருக்கிறார்.

"சண்டே ஐலண்ட்" பத்திரிகையின் சிறப்புச் செய்தியாளர் திரு. பிரங்லின் ரவிராஜ் சத்தியபாலன் அண்மையில் யாழ்ப்பாணம் சென்றிருந்தார். மூன்று வார காலங்களுக்கு மேலாக அங்கு தங்கி நின்ற திரு. ரவிராஜ் விடுதலைப் புலிகள் தலைவர் திரு. வே. பிரபாகரனை சிறப்புப் பேட்டி கண்டார்.

அவரது பேட்டி நேற்றைய "சண்டே ஐலண்டில்" வெளி

[6 ஆம் பக்கம் பார்க்க]




பிரபாகரன் பேட்டி குறித்து பி. பி. சியின் கருத்து (2 ஆம் பக்கத்தில்)


## செட்டிகுளத்தில் ஷெல் தாக்குதல்

யாழ்ப்பாணம், பெப். 24

வவுனியா - செட்டிகுளம் பகுதியில் நிலை கொண்டிருக்கும் படையினர் கடந்த இரு நாட்களாக அயல் கிராமங்களை நோக்கி கடும் ஷெல் தாக்குதலையும், துப்பாக்கிப் பிரயோகத் தாக்குதல்களையும் நடத்தினர் என்று தெரிவிக்கப்பட்டது. [ஒ-3]

## தமிழர் கூட்டணிக்கு இந்தியா ஒருகோடி ரூபாவை வழங்கும்?

கொழும்பு, பெப். 24

தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு 50 லட்சம் ரூபாவை [இலங்கைநாணயத்தில் சுமார் ஒரு கோடி ரூபாவை] வழங்க இந்திய அரசு முடிவு செய்திருக்கிறது.

"இண்டியன் எக்ஸ்பிரஸ்" பத்திரிகை நிறுவனத்தின் 'தினமணி' இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

தமிழர் விடுதலைக் கூட்டணி தூதுக் குழு ஒன்று அண்மையில் இந்தியாவுக்கு விஜயம் செய்து, இந்திய வெளிவிவகாரஅமைச்சர் மாதவசிங் சோளங்கி, வெளிவிவகார அமைச்சுச் செயலாளர் ஜே. என். டிக்ஸிற் ஆகியோரையும் மற்றும் அதிகாரிகளையும் சந்தித்துப் பேச்சு நடத்தியது—அதையடுத்தே கூட்டணிக்கு நிதி வழங்க முடிவாகியதாம்.

அந்தச் செய்தியில் மேலும்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## கிளிநொச்சி தவிர்ந்த வன்னிப் பிரதேசத்தில் இன்று முதல் ஊரடங்கு

மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் இன்று அதிகாலை ஒரு மணிமுதல் மறு அறிவித்தல் வரை ஊரடங்குச் சட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டிருப்பதாக கூட்டுப் படைத் தலைமை அலுவலகம் அறிவித்திருக்கிறது.

மன்னார்தீவு மற்றும் வவுனியாவில் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்கள் தவிர்ந்த ஏனைய இடங்களிலேயே ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

ஊரடங்கு வேளையில் மக்கள் தங்கள் வீடுகள் அல்லது பாடசாலைகள் மற்றும் கோயில்களில் தங்கியிருக்க வேண்டும் என்று—மற்றொரு செய்தியில் தெரிவிக்கப்பட்டது. [ஒ-எ]

## நாடாளுமன்றில் எம். பிக்கள் படுக்கை விரித்து தூங்கினர்!

கொழும்பு, பெப். 24

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எம். பிக்கள் முப்பது பேர் படுக்கை விரிப்புகள் மற்றும் தலையணைகளுடன் நாடாளுமன்றத்துக்குள், சென்று நாடாளுமன்றக் கட்டடத்தினுள் தரையில் விரிப்புகளை விரித்து படுத்துறங்கினர்.

இந்தச் சம்பவம் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

கொழும்பில் தங்கியிருக்க தமக்குப் போதிய வசதி செய்து தரப்படவில்லை என்று தெரிவித்து, அதற்கு ஆட்சேபம் தெரிவிக்கும் நடவடிக்கையாகவே அவர்கள் நாடாளுமன்றக் கட்டடத்தில் படுத்துறங்கினர்.

எம். பிக்கள் படுத்துத் தூங்குவது பற்றி கேள்விப்பட்டு—சுமார் ஒரு மணி நேரத்தின் பின்னர்—சபாநாயகர் அங்கு விரைந்து வந்தார்; எம். பிக்களைத் தட்டி எழுப்பி அவர்களின் குறைகளைக் கேட்டறிந்தார். அவர்களுக்கு உரிய வசதி செய்து தரப்படும் என்று சபாநாயகர் உறுதி வழங்கியதை அடுத்து எம். பிக்கள் வாரிச் சுருட்டிக் கொண்டு நாடாளுமன்றக் கட்டடத்தை விட்டு அகன்றனர். [ஒ-10]

## முச்சந்தி முரளி



ஆட்சியைப் பிடிக்கிறமாதிரி கனவும் கண்டிருப்பினம்......

## தெரிவுக் குழு முன் யோசனை: புலிகள் கொழும்பு வர பாதுகாப்பு கிடைக்குமாம்!

கொழும்பு, பெப். 24

இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு கண்டறிவதற்கான நாடாளுமன்றத் தெரிவுக் குழு முன் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி நேரடியாக சாட்சியமளிக்க விரும்பினால்—

மக்கள் முன்னணியின் பிரதிநிதிகள் கொழும்பு வர பாதுகாப்பு ஏற்பாடுகளை அரசாங்கத்துடன் பேசி செய்து கொடுக்கலாம்.

இவ்வாறு 'குவாக்கர்ஸ்' குழுவினரிடம் அரசாங்கத்தோடு நெருங்கிய வட்டாரங்கள் அபிப்பிராயம் தெரிவித்ததாக அறிய வருகிறது.

இது தொடர்பான செய்தி நேற்றைய தமிழ் வார இதழ் ஒன்றிலும் வெளியாகி உள்ளது.

இதற்கிடையே—

தெரிவுக் குழு யாழ்ப்பாணம் செல்ல வேண்டுமாயின் அதற்கு புலிகள் இயக்கம் உத்தியோக பூர்வமான அழைப்பை விடுக்க வேண்டும் எனவும்—

அவ்வாறான அழைப்பைக் கொண்டு தெரிவுக் குழு யாழ். செல்வதா, இல்லையா என்பது பின்னர் தீர்மானிக்கப்படும் எனவும் கொழும்புப் பத்திரிகைச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஒ]

## யாழ். குடாநாடு மீதான தாக்குதல் தாமதமாகும்?

கொழும்பு, பெப். 24

யாழ்ப்பாணக் குடாநாட்டின் மீது இராணுவத்தினர் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ள பெருந்தாக்குதல் நடவடிக்கை தாமதமாகலாம் என்று பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் கவலை கொண்டுள்ளனவாம்.

ஒவ்வொன்றும் 15 கோடி ரூபா செலவில் கொள்வனவு செய்யப்பட்ட மூன்று பெரிய பீரங்கிப் படகுகள் இன்னும் மூன்று மாதங்களுக்குப் பாவிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதே இந்த பின்னடைவுக்குக் காரணம் என்று கொழும்புப் பத்திரிகை ஒன்று நேற்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

இந்த மூன்று பீரங்கிப்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## கிறிஸ்தவ தூதுக்குழு இன்று இங்கு வரும்?

யாழ்ப்பாணம், பெப். 24

தென்னிலங்கையில் இருந்து கிறிஸ்தவ மதத் தலைவர்களின் தூதுக்குழு ஒன்று, இன்று திங்கட்கிழமை இரவு யாழ்ப்பாணம் வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பிரஸ்தாப தூதுக்குழுவுக்கு ஏற்கனவே யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த மெதடிஸ்த திருச்சபையின் முன்னாள் தலைவர் வண. பிதா சோமா பெரேரா தலைமை வகிப்பார். அவருடன் கத்தோலிக்க சபையைச் சேர்ந்த வண. பிதா போல் ஹஸ்பர்ஸ், மெதடிஸ்த திருச்சபையின் உப தலைவர் திருமதி இவோன் பேர்டினன்ட் மற்றும் ஒரு கிறிஸ்தவ மத குருவும் வருவதற்கு ஏற்பாடாகி இருந்தது.

இவர்களுடன் வருவதற்கு

[6 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரு தரப்புகளிலும் நம்பிக்கையீனம் அதனால் மத்தியஸ்தம் தேவையே!

## பிரபா பேட்டி குறித்து பி.பி.சி விமர்சனம்

**இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு ஐ நாவின் மத்தியஸ்தத்தைக் கோருவதாகத் தெரிவித்து விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரன் வழங்கிய பத்திரிகைப் பேட்டி குறித்து பி.பி.சி. செய்திப் பிரிவினர், கொழும்பில் உள்ள தமது செய்தியாளர் கிறிஸ்தோபர் மொரிஸுடன் தொலைபேசிப் பேட்டி ஒன்றை நேற்று நடத்தினர். அதன் விவரத்தை இங்கே தருகிறோம்,**

கே: இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணுவதில் ஐ. நா.வைத் தொடர்பு படுத்துவது எந்தளவு யதார்த்தமானது என்று கூறமுடியுமா?

ப: சர்வதேச மத்தியஸ்தம் தேவை என்று அண்மைக்காலமாக விடுதலைப் புலிகள் கூறி வந்துள்ளார்கள். இப்போது தான் இக்கோரிக்கை முதல் தடவையாக விடுதலைப் புலிகள் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் வாயில் இருந்து வந்துள்ளது அதுவும் ஐ. நா. மத்தியஸ்தம் தேவை என்று திட்டவட்டமாக இப்போது தான் கூறப்பட்டுள்ளது.

ஐ. நா. மத்தியஸ்தம் தேவை என்ற தமது யோசனை குறித்து விடுதலைப் புலிகள் மிகவும் அக்கறையாக 'சீரியஸாக' இருக்கின்றார்கள் என்று நான் எண்ணுகின்றேன். இது தொடர்பாக ஸ்ரீலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான இடைவெளியை நிரப்ப முடியுமா என்பதே இப்போதுள்ள கேள்வியாகும்.

கே: இந்த நெருக்கடியைத் தீர்க்க ஐ. நா. எப்படி உதவ முடியும் என்று எண்ணுகிறீர்கள்?

ப: எதிர்காலத்தில் அமைதிப் பேச்சு நடத்துவதற்கு ஏதோ ஒரு வகையிலான உத்தரவாதம் வேண்டும் என்று இரு தரப்பினருமே விரும்புகின்றனர். பரஸ்பரம் நம்பிக்கையீனம் இரு தரப்பிலும் நிலவுவதே இதற்குக் காரணமாகும்.

கே: இலங்கைப் பத்திரிகையாளர் ஒருவர் திரு. பிரபாகரனுடன் சில தினங்களுக்கு முன்னர் நடத்திய பேட்டி ஒன்றிலேயே திரு. பிரபாகரன் இக்கோரிக்கையை விடுத்துள்ளார். திரு. பிரபாகரனுடன் பேசுவது பெரும் கஷ்டமான காரியமாக இருக்கும் போது, அப்பத்திரிகையாளர் எப்படி இப்பேட்டியைப் பெற முடிந்தது?

ப: அவர் ஒரு தமிழர். அது தான் அவருக்கு உதவியது. தமிழர் அல்லது மேற்கு நாட்டுப் பத்திரிகையாளர் தான் யாழ்ப்பாணத்திற்குச் செல்ல முடிகின்றது. மற்றப் பத்திரிகையாளர்கள் தங்களைப் பணயம் வைத்தே அங்கு போய் வரவேண்டியுள்ளதாகக் கருதுகிறார்கள்.

கே: இப்பேட்டி ஏன் தாமதமாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளது? இத்தாமதத்திற்குப் பின்னால் ஏதாவது கபடமான (Sinister) நோக்கம் உண்டா?

ப: விடுதலைப் புலிகளின் அபிப்பிராயங்களை அதிகமாகப் பிரசுரிப்பதற்கு கொழும்புப் பத்திரிகைகள் கலவரப்படுகின்றன. சர்வதேச செய்தி ஏஜன்ஸிகள் மற்றும் பி. பி. சியை மேற்கோள் காட்டியே உள்நாட்டுப் பத்திரிகைகள் விடுதலைப் புலிகள் பற்றிய செய்திகளைப் பிரசுரிக்கின்றன.

கே; இலங்கைப் பிரச்சினையில் மத்தியஸ்தம் காணுவதன் மூலம் தீர்வு ஒன்று காணப்படலாம் என்று கூறிக்கொள்வது நடக்கக்கூடிய யதார்த்தமான காரியம் என்று எண்ணுகிறீர்களா?

ப: தற்போதுள்ள முட்டுக்கட்டையை உடைப்பதற்கு ஏதாவது செய்தாக வேண்டும் என்று நான் எண்ணுகின்றேன். இதுவிஷயத்தில் ஐ.நா. எவ்வளவு அக்கறை காட்டுகிறது என்பது வேறு விஷயம். இரு தரப்பினருடனும் யாராவது ஒருவர் தொடர்பு கொண்டு பேச்சு நடத்த முயற்சிக்கவேண்டியுள்ளது.

அமைதி, சமாதானத்தை பேச்சுவார்த்தை மூலம் ஏற்படுத்த இதுவே இறுதியானதும் உண்மையானதுமான சந்தர்ப்பமாகும் என்று பலரும் எண்ணுகிறார்கள். யாழ். குடா மீது இராணுவத் தாக்குதலை மேற்கொள்ள இராணுவம் தயாராகி வருகின்றது.

ஆனால் விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் தனது பேட்டியில் ஒன்றைத் தெளிவாகக் கூறியிருக்கின்றார்.

இராணுவத் தாக்குதல் இடம் பெற்றால், சமாதானத்தை ஏற்படுத்தக் கிடைத்த கடைசிச் சந்தர்ப்பம் மறைந்துவிடும் என்று திரு. பிரபாகரன் எச்சரித்திருக்கின்றார்.

தனி ஈழம் தவிர வேறு ஒன்றுக்கும் தாம் இணங்க முடியாத நிலைதான் ஏற்படும் என்றும் அவர் கூறியிருக்கின்றார். இரு தரப்பினரின் அபிலாஷைகளுக்கும் இடையே பெரும் இடைவெளி இருப்பினும் பேச்சு மூலம் தீர்வு காண்பதற்கு முயற்சிப்பதில் பெறுமதி உண்டு.

### பி. பி. ஸி. செய்தி

இதே சமயம் திரு. பிரபாகரனின் பேட்டி குறித்து பி. பி. ஸிக்கு அனுப்பிய செய்தியில் கிறிஸ்தோபர் மொரிஸ் மேலும் தெரிவித்திருப்பதாவது :-

பூரண விடுதலைக்கு சற்றுக் குறைந்த அரசியல் தீர்வு ஒன்றை காண்பது குறித்து அரசாங்கத்துடன் பேச்சு நடத்துவதற்கு விடுதலைப் புலிகளின் தலைவர்கள் தயாராக உள்ளனர்.

சிங்கள மேலாதிக்கம் கொண்ட கொழும்பு அரசும் குறிப்பிடத்தக்க சலுகைகளை வழங்கத் தயாராக இருக்கிறது.

கடந்த இரு ஆண்டுகளில் சர்வதேச மத்தியஸ்தத்துக்கு பல தடவைகள் முயற்சி எடுக்கப்பட்டன. ஆஸ்திரேலிய அரசு பொதுநல அமைப்பின் மத்தியஸ்தத்தை சிபாரிசு செய்தது. கனடாவும் பல ஐரோப்பிய நாடுகளும் மத்தியஸ்தம் செய்ய தமது விருப்பத்தைத் தெரிவித்தன.

ஆனால் இருதரப்பிலும் நிலவி வரும் பரஸ்பர நம்பிக்கையற்ற நிலை காரணமாக இதுவரை எந்தவிதமான முன்னேற்றமும் ஏற்படவில்லை.

பேச்சுவார்த்தைகளில் விடுதலைப் புலிகளை சமபங்காளிகளாக நடத்த ஸ்ரீலங்கா அரசு விரும்பாமலிருக்கக் கூடும்.

சர்வதேச மத்தியஸ்தம் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய நிலை ஏற்பட்டாலும், பேச்சுவார்த்தைக்கு முன்னர் விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கீழே வைக்க வேண்டும் என்ற தனது நிபந்தனையை அரசு விட்டுக் கொடுக்காது என்றே தோன்றுகிறது

ஆனால் விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைக்கு எவ்வித நிபந்தனைகளும் விதிக்கப்படக் கூடாது என்ற நிலைப்பாட்டைக் கொண்டுள்ளனர்.

தமிழ்மக்கள் தனியான ஒரு தேசிய இனம் என்பதால் அவர்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு என்பதை ஸ்ரீலங்கா அரசு அங்கீகரிக்க வேண்டும் என்பதும் அவர்களது நிலைப்பாடாகும்.

[அ-உ-எ-10]


# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



## திருமதி சபாபதி மங்கையர்க்கரசி

தோற்றம்:- 21-08-1934 ● மறைவு:- 25-01-1992

குலமகளாய், குடும்பத்தின் ஒளிவிளக்காய்
அன்பின் இருப்பிடமாய், பண்பின் பிறப்பிடமாய்
பாசமுடன் காலமெல்லாம் எமை வளர்த்தாய்
நேசமுள்ள உம் நினைவு எம் நெஞ்சைவிட்டகலாது.

**ஆத்மசாந்திக்காக இன்று பிரார்த்திக்கிறோம்.**

224, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். — குடும்பத்தினர் (19842)


## இன்று நடப்பவை

அச்சுவேலி, பெப். 24

அச்சுவேலி கொத்தணிப் பாடசாலைகளின் உடற்பயிற்சிப் போட்டிகள் இன்று அச்சுவேலி புனித திரேசா மகளிர் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

[ஒ-11]

★ ★ ★

பருத்தித்துறை கொட்டடி சித்தி விநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் இன்று முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

எதிர்வரும் 20ஆம் திகதி ரதோற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம் பெறும்.

[ஒ-165]

★ ★ ★

யாழ்ப்பாணம், பெப். 24

அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை சாரணர் குழு புதிய சாரணர்களுக்கான சின்னம் சூட்டு விழாவை இன்று நடத்தவுள்ளது. [ஒ]

## கொழும்பு விலையில் சவர்க்காரம்!

புதுக்குடியிருப்பு ப. நோ. கூ. சங்கம் கொழும்பு விலையில் சன்லைட், லகஸ் போன்ற சவர்க்கார வகைகளை கட்டுப்பாடு ஏதுமின்றி விற்பனை செய்து வருகிறது.

## யாழ். மாவட்டத்துக்கு

# மார்ச் 1 முதல் இடமாற்றம் 32 ஆசிரியர்களுக்கு!

யாழ்ப்பாணம், பெப். 24

வட மாகாணத்தில் உள்ள ஏனைய நான்கு மாவட்டங்களில் இருந்தும் முப்பத்திரண்டு ஆசிரியர்கள் எதிர்வரும் மார்ச் முதலாம் திகதி யாழ்ப்பாண மாவட்டத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்கள்.

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் கல்வி அமைச்சு செய்துள்ள இந்த இடமாற்றங்கள் குறித்து சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தினருக்கும் இந்த இடமாற்றப்பட்டியல் கிடைத்திருப்பதாக அதன் செயலாளர் திரு. த மகாசிவம் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்துக்கு இடமாற்றம் பெற்ற ஆசிரியர்களின் விவரமும், அவர்கள் முன்னர் பயிற்றுவித்த பாடசாலைகள் விவரமும் வருமாறு:-

திருமதி இந்திராணி இரட்ணசோதி [கிளி-முருகானந்த வித்தி-முரசுமோட்டை]

திரு. விஸ்வலிங்கம் அருளானந்தம் [கிளி - வேம்பொடுகேணி சி. சி. ரி. எம். எல்.

திருமதி சகுந்தலாதேவி கைலாயநாதன் [கிளி-முருகானந்தா வித்-பரந்தன்]

திரு. இரத்தினம் தயாபரன் [கிளி-பூநகரி ம வி]

திருமதி ரஞ்சனி ஸ்ரீகதிர்காமநாதன் [கிளி:பளை ம வி]

திருமதி கௌரி சேதுராஜா [கிளி-இயக்கச்சி அ. த.க. பா]

திருமதி அம்சத்வனி மோகனராஜசிங்கம் [கிளி-பளை ம.வி]

திரு. அ. ஈஸ்வரநாதன் [பூநகரி ம. வி]

திருமதி இ. சிவலிங்கம் [கிளி-இராமநாதபுரம் ம. வி]

செல்வி கமலாம்பிகை கணபதிப்பிள்ளை [கிளி-பரந்தன் இ. ம. வி]

திருமதி க. ஸ்ரீமுருகதாஸ் [கிளி - திருவையாறு அ. த. க. பா]

திரு. க. சேய்சோதிகாந்தன் [கிளி-கோயில்வயல் சி. சி. த. க. பா]

திரு. எஸ். மனோகரன் [மன்-புனித ஆனாள் ம.வி]

திரு. வி. நடராஜா [மன்-புனித சவேரியார் ஆண் ம வி]

திருமதி இராசலிங்கம் பரமேஸ்வரி [மன்-சித்திவிநாயகர் இ. க]

திருமதி தேவராசா செல்வராணி [மன் - விடத்தல்தீவு றோ. க. த. க. பா]

செல்வி திருமகள் வினாசித்தம்பி [மன்-அடம்பன் ம.ம.வி]

திருமதி தேவகாந்தி ஞானசூரியன் [மன் - அடம்பன் ம. ம. வி]

திரு. ச. பிரணதார்த்திகர சர்மா [மன் - விடத்தல்தீவு றோ. க. த. க. பா]

செல்வி கலாவதி குமாரசாமி [மன்-கள்ளியடி அ. த. க. பா]

திரு. எஸ். மகேஸ்வரன் [மன்-நானாட்டான் ம. வி]

செல்வி கேதீஸ்வரி தம்பு [மன்-விடத்தல்தீவு றோ. க. த. க. பா]

செல்வி ரேணுகாதேவி அருணாசலம் [மன்-புனித சவேரியார் பெ. ம. ம. வி]

திருமதி கமலாதேவி நடராஜா [மன்-புனித சவேரியார் பெ. ம. ம. வி]

செல்வி ஐ. தயானந்தராசா [மன்-சித்தி விநாயகர் இந்துக் கல் ]

திருமதி சரோஜினி அருணகிரிவாசன் [மன் - மாவிலங்கேணி றோ. க. த. க. பா]

செல்வி கதிரேசு பத்மாவதி [மன்- எழுத்தூர் றோ. க. த. க. பா]

திருமதி சித்திராதேவி ஞானசுப்பிரமணியம் [கிளி-அக்கராயன் ம. வி]

திருமதி நித்தியலட்சுமி செல்வராஜா [கிளி - பூநகரி ம. வி]

செல்வி நளினா விஸ்வலிங்கம் [கிளி - பரந்தன் இந்து ம. வி]

செல்வி பத்மலோசினி கந்தப்பு [கிளி-பரந்தன் இந்து ம. வி]

இவர்கள் இடமாற்றம் பெற விரும்பிய பாடசாலைகளும் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆனால் இவர்களுக்குரிய பாடசாலைகளை யாழ். மாவட்டக் கல்விப் பணிப்பாளரே ஒதுக்குவார்.

[அ-ஒ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

தமிழகத்தின்

# முன்னாள் ஆளுநர் அலெக்ஸாண்டர் இந்திய உப ஜனாதிபதியாகலாம்!

## நரசிம்மராவ் திரைமறைவில் முயற்சி

புதுடில்லி, பெப். 24

தமிழகத்தின் முன்னாள் ஆளுநர் அலெக்ஸாண்டரை உப ஜனாதிபதியாக்க பிரதமர் நரசிம்மராவ் திட்டமிட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

ஜானகி இராமச்சந்திரன் அ.தி.மு.க. அரசு கலைக்கப்பட்ட பின்னர், புதிய தேர்தல் நடைபெற்று கலைஞர் கருணாநிதியின் அரசு அமைக்கப்படும் வரை தமிழகத்தை நிர்வகித்து வந்தவர் திரு. அலெக்ஸாண்டர் என்பது தெரிந்ததே.

இந்திரா காந்தி பிரதமராக இருந்த போது அவரது முதன்மைச் செயலாளராக இருந்த அலெக்ஸாண்டர், பின் ராஜீவ் ஆட்சியின் போது பிரிட்டிஷ் தூதராக நியமிக்கப்பட்டார்.

தற்போது இந்திய ஜனாதிபதியாக இருக்கும் வெங்கட்ராமனின் பதவிக்காலம் எதிர் வரும் ஜூலை மாதத்துடன் முடிவடையவிருக்கிறது. மீண்டும் அப்பதவிக்கு தாம் போட்டியிடப் போவதில்லை என்று வெங்கட்ராமன் அறிவித்து விட்டார்.

இந்நிலையில்—

நாடாளுமன்றம், ராஜ்ய சபை மற்றும் மாநில சட்ட சபைகளில் உள்ள அங்கத்தவர்களின் போதிய ஆதரவு ஆளும் கட்சியான இந்திரா காங்கிரஸுக்கு இல்லை என்று கருதப்படுவதால், ஜனாதிபதித் தேர்தல் அக்கட்சியைப் பொறுத்தவரை ஒரு சோதனைக் களமாக இருக்கும் என்று கருதப்படுகிறது.

இதனால் ஏனைய முக்கிய எதிர்க்கட்சிகளின் ஆதரவை பெறக் கூடிய ஒருவரையே ஜனாதிபதி பதவிக்கு தமது கட்சி வேட்பாளராக நிறுத்த பிரதமர் நரசிம்மராவ் விரும்புவதாகத் தெரிகிறது.

இந்த வகையில்—

ஜனாதிபதி பதவிக்கு தற்போதைய உப ஜனாதிபதியான சங்கர் தயாள் சர்மாவையும், உப ஜனாதிபதி பதவிக்கு அலெக்ஸாண்டரையும் நிறுத்த ராவ் விரும்புகிறாராம்.

ஆனால் இந்த யோசனைக்கு காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே எதிர்ப்பு இருப்பதாகத் தெரிகிறது. உப ஜனாதிபதி பதவியின்மீது கேரள முதல்வர் கருணாகரன் 'கண்' வைத்திருப்பதாகவும், அவர் பிரதமர் ராவின் யோசனையை எதிர்த்து வருவதாகவும் சென்னைப் பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன.

இதே சமயம்—

உப ஜனாதிபதி பதவிக்கு அலெக்ஸாண்டர் நியமிக்கப்படுவதை தமிழகத்தின் அ.தி.மு.க. ஆட்சியும் எதிர்த்து வருகிறதாம்.

ஜெயலலிதா முதல்வரானதும், அலெக்ஸாண்டரையே தமிழக ஆளுநராக நியமிக்க நரசிம்மராவ் விரும்பினார் என்றும்—

ஆனால் ஜெயலலிதா அதனை கடுமையாக எதிர்த்ததால், ராவ் பின்வாங்கிவிட்டார் என்றும் கூறப்படுகிறது. (உ-த)

## தமிழக அமைச்சரவையில் மாற்றம்

சென்னை, பெப். 24

தமிழக அமைச்சரவையில் மாற்றங்கள் மேற்கொள்வது பற்றி முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா நேற்று முன்தினம் மாலை ஆளுநர் பீஷ்ம நாராயண்சிங்கைச் சந்தித்தார்.

திரு. ரகுபதி அமைச்சரவையில் புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார். தொழிலாளர் நலத்துறை அமைச்சராக நியமிக்கப்பட்ட திரு. ரகுபதி எதிர்வரும் வியாழன் பதவியேற்பார்.

தொழிலாளர் நலத்துறை அமைச்சராகப் பதவி வசித்து வந்த திரு. சி. அரங்கநாயகம் கல்வி அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

கல்வி அமைச்சராக இருந்த திரு. இராம. வீரப்பன் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளதுடன் அகதிகள் மறுவாழ்வுத் துறை அமைச்சும் திரு. வீரப்பனிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

புதிய அமைச்சர் ரகுபதியின் நியமனத்துடன் தமிழ் நாடு அமைச்சரவையின் எண்ணிக்கை 19 ஆக அதிகரித்துள்ளது. (த-எ)

# இனப் பிரச்சினைக்கு உள்நாட்டு தீர்வே தேவை

## ஜேர்மன் அதிபர் பேட்டி

கொழும்பு, பெப். 24

இலங்கையின் இனப்பிரச்சினையை அவர்களின் சொந்த நாட்டில் வைத்தே தீர்வு காணப்பட வேண்டும். இதற்காக உதவ நாம் முயற்சிக்க வேண்டும்.

'ரீடர்ஸ் டைஜஸ்ட்' என்ற பிரபல ஆங்கில சஞ்சிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் ஜேர்மன் பிரதமர் ஹெல்மட் கோல் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இச் சஞ்சிகையின் ஐரோப்பிய பிரிவு ஆசிரியபீட சிரேஷ்ட பத்திரிகையாளர்கள் திரு. கோலைப் பேட்டி கண்டிருந்தனர்.

ஐரோப்பாவில் உருவாகி வரும் இனரீதியான பதற்ற நிலை பற்றிய கேள்விகளுக்கு பதில் அளிக்கையில் திரு. ஹெல்மட் கோல் மேலும் தெரிவித்ததாவது—

இலங்கையர்களை ஜெட் விமானங்களில் ஏற்றி வந்து பிராங்க்போட் விமானநிலையத்தில் இறக்கிவிட்டு, 'ஜேர்மன் நாடு இனி உங்களைக் கவனித்துக் கொள்ளும்' என்று அவர்களுக்குக் கூறுவதன் மூலம் இலங்கைப் பிரச்சினைக்கு நாம் தீர்வு காண முடியாது.

வறுமை காரணமாக சொந்த நாடுகளில் இருந்து வெளியேறி முற்றாக வேறு கலாசாரத்தைக் கொண்ட நாடுகளில் மக்கள் தஞ்சமடைய முயற்சிப்பது பகுத்தறிவுள்ள கொள்கையாக இருக்க முடியாது,

தாய் நாட்டில் அரசியல், இன மற்றும் மதரீதியில் துன்புறுத்தப்படும் எவருக்கும் நிபந்தனையின்றி அரசியல் தஞ்சம் அளிக்கும் புனிதமான கொள்கை இங்கு ஏற்றுக் கொள்ளப்படும்.

இவ்வாறு திரு. கோல் பேட்டியில் தெரிவித்தார். (இ-எ)

ஜனாதிபதி நடத்திய பாராட்டுக் கூட்டத்தில்

# யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர வலியுறுத்திய தமிழ் மாணவன்

கொழும்பு, பெப். 24

வடக்கு - கிழக்குப் பகுதி மாணவர்கள் மின்சாரம் இன்றி மண்ணெண்ணெய் இன்றி குப்பி விளக்கில் கஷ்டப்பட்டுத் தமது கல்வியைத் தொடர வேண்டியுள்ளது, நானும் அவ்வாறு கஷ்டப்பட்டுப் படித்தே பல்கலைக் கழக அனுமதி பெற்றேன். எனவே வடக்கு - கிழக்கு யுத்தம் ஒரு முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும்.

கடந்த வருடம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் அதி திறமைச் சித்தி பெற்ற அனைத்து மாவட்டங்களையும் சேர்ந்த மாணவர்களை கௌரவிக்கும் வைபவம் ஒன்று கடந்த சனிக்கிழமை ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்றது. அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த மாணவன் ஒருவர் முன்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும் என்று அந்த மாணவன் வலியுறுத்திய போது, அந்த மாணவனின் வேண்டுகோள் அனைவரின் நெஞ்சத்தையும் தொட்டதாக கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கின்றது.

முல்லைத்தீவு மாணவனின் உரையைச் சுட்டிக் காட்டிப் பேசிய ஜனாதிபதி பிரேமதாஸா, இன, மத, மொழி பேதமற்ற பழைய மாணவர் சமுதாயம் மீண்டும் ஏற்பட வேண்டும் என்று வற்புறுத்தினார்.

வடக்கு - கிழக்கில் தற்போது நடைபெற்று வரும் தேவையற்ற யுத்தம் நிறுத்தப்பட வேண்டும். இந்த யுத்தம் நிறுத்தப்பட்டால், அங்கு செலவு செய்யப்படும் பெருமளவு பணத்தைக் கல்வி மற்றும் சுகாதார சேவைகளுக்குப் பயன்படுத்தலாம் என்றும் ஜனாதிபதி சொன்னார். [த-எ]

# ஒருங்கிணைந்த விவசாயம் இன்றைய நிலையில் உதவும்

## மருதனார்மடம் கருத்தரங்கில் உரை

மானிப்பாய், பெப். 24

"இன்றைய சூழ்நிலையில் ஒருங்கிணைந்த விவசாயம் மூலம் பயிர் உற்பத்தியையும், மிருக உற்பத்தியையும் விருத்தி செய்ய முடியும். எரிபொருள் தட்டுப்பாடு, இழுவை இயந்திர விலை உயர்வு, உர வகைத் தட்டுப்பாடு, விலை உயர்வு போன்ற பல காரணங்களால் ஒன்றிணைந்த விவசாய உற்பத்தியை மேற்கொள்வது அவசியமாகிறது. சீனா, இந்தியா, பிலிப்பீன்ஸ் போன்ற நாடுகளில் இது போன்ற விவசாய முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. விவசாயிகள் பண்ணையில் இருந்து கிடைக்கும் தாவர, மிருக பொருள்கள் எதையும் வீணாக்காது அவற்றை தகுந்த முறையில் பயன்படுத்த வேண்டும்."

குரும்பசிட்டி சன்மார்க்க சபையினர் யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனத்துடன் இணைந்து மருதனார் மடம் விவசாய கல்லூரியில் நடத்திய "இன்றைய சூழ்நிலையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் ஒன்றிணைந்த விவசாயம்" என்னும் கருத்தரங்கில் யாழ்ப்பாணம் விவசாய விரிவாக்க உதவிப் பணிப்பாளர் திரு. கே. குணரத்தினம் மேற்கண்டவாறு கூறினார்.

ஒருங்கிணைந்த விவசாயம் யாழ்ப்பாண மக்களுக்கு புதியதல்ல; எருவுக்காகவும், இழுவைச் சக்திக்காகவும் விவசாயிகள் கால்நடைகளை நம்பி இருந்தனர். செயற்கை உரங்கள், உழவு இயந்திரங்களின் வருகையால் கால்நடைகளின் பயன்பாட்டை பெற விவசாயிகள் தயங்கினர். இதனால் பயிர்ச்செய்கை காணிகளின் வளம் குறைந்து கொண்டு வருவதை நாம் காணலாம்.

மண்ணின் வளத்தை விருத்தி செய்யும் பண்பு இயற்கை எருவகைகளுக்கே உண்டு. செயற்கை உரங்களை தொடர்ச்சியாகப் பாவிப்பதன் மூலம் மண்ணின் வளம் பாதிப்படையும்.

இப்படி அவர் கூறினார்.

முதல்லிப்பழை அரச கால்நடை வைத்தியர் திருமதி சுமணதேவி தனபாலசிங்கம் "ஒருங்கிணைந்த விவசாயத்தில் விலங்கு வேளாண்மை" என்ற பொருள் பற்றிப் பேசுகையில் கூறியதாவது:

புரதச் சத்து குறைந்த உணவின் குறைபாடு அடுத்த பரம்பரைக்குப் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும், புரதச் சத்தைத் தரக்கூடிய பன்றி, முயல் வளர்ப்பை நாம் ஊக்குவிக்க வேண்டும். வீட்டுக்கு ஒரு மாடு வளர்ப்பதைப் போல வீட்டுக்கு ஒரு பன்றி. முயல் வளர்க்கும் திட்டத்தை அடுத்த ஆண்டிலிருந்தாவது மேற்கொள்ள வேண்டும்.

ஆடு, மாடு, கோழி வளர்ப்புக்கு ஊக்கம் அளிக்கும் பொது நிறுவனங்கள், உதவி வழங்கும் நிறுவனங்கள் பன்றி, முயல் வளர்ப்புக்கும் நிதியும் உதவியும் வழங்கி ஊக்குவிக்க வேண்டும்.

கோழி வளர்ப்பை பலர் கைவிடும் நிலையில் உள்ளனர்.

கோழிகளுக்கான தீன் வகை தட்டுப்பாடு, நோய்த் தடுப்பு மருந்துகள் இன்மை போன்ற தாக்கங்களால் கோழி வளர்ப்பைப் பலர் கைவிடும் நிலையில் உள்ளனர். இதற்குப் பதிலாக பன்றி, முயல் ஆகியவற்றோடு மீன், தாரா போன்றவற்றையும் வளர்க்க வேண்டும்.

முயல் வளர்ப்பின் மூலம் இன்னொரு கைத்தொழில் முயற்சியையும் ஆரம்பிக்கலாம். முயலின் தோல் கைபாக், பெல்ட் போன்ற பொருள்கள் தயாரிக்கப் பயன்படும்.

இப்படி அவர் கூறினார்.

## தற்காலிக ஆசிரியர்கள்

தாளையடி, பெப். 24

வடமராட்சி கல்விக் கோட்டத்திலுள்ள பாடசாலைகளில் நிலவும் வெற்றிடங்களுக்கு 180 தற்காலிக ஆசிரியர் நியமிக்கப்படவுள்ளார்கள். (த-14)

# இலங்கை 3 விக்கெட்டுகளால் சிம்பாப்வேயை வென்றது

வெல்லிங்டன், பெப். 24

உலக கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் நேற்று இலங்கை அணி 3 விக்கெட்டுகளால் சிம்பாப்வே அணியை வென்றது.

சிம்பாப்வே அணி நான்கு விக்கெட்டுகளை இழந்து 312 ஓட்டங்களை எடுத்தது. ஆண்டி பிளவர் 115 ஓட்டங்களை எடுத்து, ஆட்டம் இழக்காமல் இருந்தார்.

இலங்கை அணி ஏழு விக்கெட்டுகள் இழப்பிற்கு 314 ஓட்டங்களை எடுத்தது. சமரசேகரா 79 ஓட்டங்களையும் மகாநம 59 ஓட்டங்களையும் எடுத்தனர். அர்ஜுன ரணதுங்க 84 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

நேற்று நடந்த போட்டியில் கலந்து கொண்டதன் மூலம் நூறாவது ஒரு நாள் கிரிகெட் போட்டியில் பங்கு பற்றிய முதலாவது இலங்கையர் என்ற பெருமையை அர்ஜுன ரணதுங்கா பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

மெல்பேர்னில் நடைபெற்ற மற்றுமொரு முதல் சுற்று ஆட்டத்தில் மே. இந்திய தீவுகள் அணி பாகிஸ்தான் அணியை 10 விக்கெட்டுகளால் தோற்கடித்தது.

பாகிஸ்தான் அணி 50 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை இழந்து 220 ஓட்டங்களைப் பெற்றது. மே. இந்திய தீவுகள் அணி 46. 5 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 221 ஓட்டங்களை எடுத்தது.

மே. இந்திய அணியின் சார்பில் டெஸ்மண்ட் ஹெய்ன்ஸ் ஆட்டமிழக்காமல் 93 ஓட்டங்களையும், பிரெய்ன் லாரா ஆட்டமிழக்காமல் 88 ஓட்டங்களையும் பெற்றனர். பிரெய்ன் லாரா இப்போட்டியின் சிறந்த வீரராகத் தெரிவு செய்யப்பட்டார். [த-எ]

## ஜே. வி. பி மீண்டும் தலைதூக்குகின்றதாம்

கொழும்பு, பெப். 24

சில மத இயக்கங்கள் ஊடாக ஜே. வி. பியினர் மீண்டும் தலைதூக்கி வருகின்றனர்.

நாடாளுமன்றத்தில் பேசுகையில் ஐக்கிய தேசியக் கட்சி எம். பி. ஹட்சன் சமரசிங்கா முன்கண்டவாறு தெரிவித்தார்.

ஜே. வி. பியினர் தீவிரமாக முன்னர் செயற்பட்டு வந்தது போன்ற ஒரு நிலை மீண்டும் நாட்டில் ஏற்படும் ஆபத்து உண்டு என்றும் அவர் எச்சரித்தார். (த-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

தேன் பெட்டிகள் இராணிப் பூச்சிகளுடன் விற்பனைக்கு உண்டு. கலர் மீன்களும் [வளர்ப்பு மீன்] விற்பனைக்கு உண்டு. தொடர்பு; சி. பவேந்திரன், 47, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

[19819]

### தேவை

பாதுகாவலர் துறையில் அனுபவம் உள்ளவர்கள் நேரில் வரவும். 24-2 1992 — 25-02-1992 நேர்முகப் பரீட்சை, தேசிய பாதுகாப்பு திட்டம், இல. 25, ஜும்மா பள்ளிவாசல் வீதி, பெரிய கடை, யாழ்ப்பாணம்.

(19826)

யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல ஆங்கில மருந்துச் சாலைக்கு அனுபவமும், ஆங்கில அறிவும் உள்ள பெண் விற்பனையாளர் தேவை. அண்மையிலுள்ளவர் விரும்பத்தக்கது சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பிக்கவும். 49/5. யாழ். றோட், யாழ்ப்பாணம். [19836]

### துர்க்கா திருமண சேவை

சகல தொழில்களிலும், மணமகன்கள் உண்டு. எல்லா மதங்களிலும் திருமணத் தொடர்பு செய்து கொடுக்கப்படும். ஜாதகம், புகைப்படத்துடன் எல்லா நாட்களிலும் தொடர்பு கொள்ளலாம். துர்க்கா திருமண சேவை, வளர்மதி இல்லம், கே. கே. எஸ். வீதி, மல்லாகம்.

(5967)

### தவறிவிட்டது

21-2-1992 வெள்ளியன்று சென் ஜோன்ஸ் கல்லூரிக்கும் றக்கா வீதிக்கும் இடையில் G. நிமலனின் பிறப்புப் பத்திரம் மற்றும் சான்றிதழ்கள் அடங்கிய என்வலப் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து தம்பிராசா, கச்சேரி நல்லூர் றோட் யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

[19837]

### நாடக நூல்

200 வானொலி நாடகங்களும், 22 மேடை நாடகங்களும் எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் சாகித்திய மண்டலப் பரிசு பெற்ற நாடக நூல். முதலாம் பிள்ளை 30/-. 10 வானொலி நாடகங்கள்.

[19835]

### ரைப்ரைட்டர்

Typewriters தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும், சிறந்த முறையில் திருத்தவும், தமிழ் - ஆங்கில தட்டச்சு வேலைகளுக்கும் பியூடோ, 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை யாழ்ப்பாணம்.

[சி-1462]

### வைத்திய நூல்

'ஆஸ்மாவிலிருந்து விடுதலை' என்னும் பிரசுரத்தை ரூபா 2/- பெறுமானமுள்ள அஞ்சல் முத்திரை அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். மில்க்வைற், யாழ்ப்பாணம்.

(சி-1537]

### சோதிட நூல்

B. V. Raman எழுதிய The Astrological Magazine, 1992 ஆம் ஆண்டு மலர் கிடைக்கும் இடம்: பூபால சிங்கம் புத்தகசாலை, 255, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். [சி-1614]

### சோயா தேவை

சோயா மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளப்படும். கையிருப்பில் உள்ளவர்கள் உடனே தொடர்பு கொள்ளவும். அண்ணா பாம், இணுவில்.

(சி-1613)

## முக்கிய அறிவித்தல்

### போலிகளை வாங்கி ஏமாறாதீர்கள்

எமது தயாரிப்புக்களான ஜெயந்தி, துர்க்கா, றோஸ் பத்திகளின் வெற்றுப் பைக்கற்றுகளை சிலர் சேகரித்து தரம் குறைந்த பத்திகளை அடைத்து விற்பனை செய்து வருவதாக எமக்கு புகார் கிடைத்துள்ளது.

எனவே பத்தி வாங்கும் போது நன்றாகப் பார்த்து வாங்கவும்.

அண்ணா தொழிலகம்,
இணுவில்.

[சி/1616]

## கணக்கியல்

### A/L-91 பயிற்சிப் பரீட்சை பகுதி II

**03 - 03 - 1992 (செவ்வாய்)**

**12-00 — 3-00** மணி பி. ப.

பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் மாணவர்கள் பின்வரும் நிறுவனங்களில் உடன் பதிவு செய்யவும்.

| | | |
|---|---|---|
| விக்னா கல்வி நிறுவனம் | ... | யாழ்ப்பாணம் |
| சிவாகி ,, ,, | ... | சாவகச்சேரி |
| யூனிவேர்சல் | ... | கந்தர்மடம் |
| குகன் கல்வி நிலையம் | ... | அச்சுவேலி |
| பீகன் ,, ,, | ... | உடுப்பிட்டி |
| N. C. A. | ... | பருத்தித்துறை |

**S. K. பிரபாகரன்**

[சி-1536]

# இந்திய 'பட்ஜெட்' கூட்டத் தொடர் இன்று

இந்திய நாடாளுமன்றத்தின் பட்ஜெட் கூட்டத் தொடர் இன்று திங்கட்கிழமை ஜனாதிபதி வெங்கடராமனால் அங்குரார்ப்பணம் செய்யப்படவுள்ளது.

மத்திய அரசின் பொருளாதாரக் கொள்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்குமுகமாக ஜனாதிபதியின் உரையை பகிஷ்கரிப்பது என்று ஜனதா தள் கட்சியும், இடதுசாரிக் கட்சிகளின் கூட்டணியும் முடிவு செய்துள்ளன.

பட்ஜெட் இம் மாதம் 29 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

[த-எ]

## உள்ளகக் கணக்குப் பரிசோதகர்
## (Internal Auditor)

மேற்படி பதவிக்கு அனுபவமும் தகுதியும் உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

ஆகக் குறைந்தது பத்து வருட வேலை அனுபவம் அவசியம். பல உப பிரிவுகளின் கணக்குகளை ஒன்றிணைத்து முக்கிய தரவுகளை முன்வைப்பதில் கைதேர்ந்தவராக இருக்க வேண்டும்.

கல்வி மற்றும் தொழில் சான்றிதழ்களுடன், உறவினரல்லாத இருவரின் நற்சாட்சிப் பத்திரங்களை இணைத்துப் பூரணமான சுய விவரங்களுடன் விண்ணப்பிக்கவும்.

நிர்வாக இயக்குநர்,
உதயன் வெளியீட்டகம்,
மின்சார நிலைய வீதி,
இல. 9, இரண்டாவது ஒழுங்கை,
யாழ்ப்பாணம்,

## ஒப்புநோக்குநர் தேவை

ஒப்புநோக்குநர் பணியில் போதிய அனுபவமும், திறமையும் உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தமிழில் நிறைந்த தேர்ச்சி பெற்றவர்களாகவும், ஆங்கிலத்தில் கணிசமான அறிவுடையவர்களாகவும் இருப்பது அவசியம். இரு மொழிகளிலும் ஒப்புநோக்குதல் செய்யத் தகுதி பெற்றவர்களுக்கே முன்னுரிமை வழங்கப்படும். பத்திரிகை அலுவலகங்களில் பணிபுரிந்தவர் பெரிதும் விரும்பப்படுவர்.

ஆண்கள் மட்டும் பூரண சுய விவரங்களுடன் விண்ணப்பிக்கவும்,

ஆளணி முகாமையாளர்,
உதயன் வெளியீட்டகம்,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



குரும்பசிட்டி

**த. சின்னத்துரை**

[இளைப்பாறிய சமூக சேவை உத்தியோகத்தர்]

தோற்றம்:
**10 — 06 — 1919**

மறைவு:
**24 — 02 — 1991**

ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்:

– குடும்பத்தினர்.

14, உடையார் ஒழுங்கை,
கந்தர்மடம். [19787]

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி சரஸ்வதி நடராசா**

மலர்வு: **07 — 07 — 1939**
உதிர்வு: **24 — 02 — 1990**

ஈராண்டு சென்றாலும் இதயத்து நின்னுருவே
தீராத மனத்துயரைத் தீர்ப்பவர் தாம் யாரெமக்கே.


கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

'' வசந்த பவனம்'',
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி.

[19761]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு: 30 — 06 — 1932



உதிர்வு: 25 — 01 — 1992

அமரர்

**கனகபிள்ளை வேலும்மயிலும்**

**24-2-1992**

ஐயா! என் அன்புத் தெய்வமே! உங்கள் அன்புச் செல்வத்தின் பிரிவு தாங்க முடியாது. அவரிடம் [பரஞ்சோதி - பவுண்] கூடிய சீக்கிரம் வந்து விடுவேன் என்று சொன்னது போல என்னைத் தனியே தவிக்கவிட்டு போய் விட்டீர்களே! உங்கள் இருவரின் பிரிவால் வாடும்;

– அம்மா

இன்று (24-2-92) அவரது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், பின்பு நடைபெறும் சபிண்டீகரண போசனத்திலும் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம். அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர், நண்பர்கள்.

மாவீரர் வீதி,
வல்வெட்டித்துறை.

(சி/1609)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### ஏமாற்றாதே, ஏமாறாதே!

சோழியன் குடுமி சும்மா ஆடாது - என்பார்கள்,

தமிழகத்தில் உள்ள ஈழத் தமிழ் அகதிகளைத் திரும்ப அழைக்கும் விடயத்தில் இலங்கை அரசாங்கத்தின் குடுமியும் காரணத்தோடு தான் ஆடியது என்பது இப்போது அம்பலத்துக்கு வந்துள்ளது,

இது விவகாரத்தில் ஈழத் தமிழர்களைவிட, தமிழகத்தில் தங்கியுள்ள அகதிகளைவிட, இந்திய அரசாங்கத்தையே கொழும்பு அரசு பெரிதும் ஏமாற்றியிருக்கிறது, ஏய்க் காட்டியிருக்கிறது. தனது தேவைக்கு இந்தியாவைத் தக்கவாறு பயன்படுத்திவிட்டு, காரியம் ஆனதும் எட்டி உதைத்திருக்கிறது!

இந்திய அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், தமிழகத்தில் ஈழத் தமிழ் அகதிகள் தங்கியிருப்பது பல வழிகளாலும், வகைகளாலும் தொந்தரவாகவும், தொல்லையாகவும், பாரமாகவும் தெரிந்தது. அதனால் இலங்கையின் தமிழ்ப் பகுதிகளில் யுத்தம் ஓய்வதற்கு முன்னர், அமைதி பிறப்பதற்கு முன்னரே அவர்களைத் திருப்பி அனுப்பி பலி கடாக்களாக்க அது திட்டமிட்டது.

இதனை நன்றாகத் தெரிந்து கொண்ட ஸ்ரீலங்கா அரசு இந்தியாவுக்கு நல்ல பிள்ளையாக நடந்துகொள்ள விரும்பியது; நடிக்கத் திட்டமிட்டது. அவ்வாறு செய்வதால் தனக்கு வேண்டிய ஒரு காரியத்தையும் சாதிக்கலாம் என்று கணக்குப் போட்டது.

இந்தியாவுடன் சேர்ந்து ஈழத் தமிழ் அகதிகளைத் திருப்பி அழைக்க இணக்கம் தெரிவித்தது தாயகம் திரும்புவோருக்கான சகல வசதிகளையும், உதவிகளையும் வழங்குவதாகவும் இலங்கை அரசு தயக்கமின்றி, சுணக்கமின்றி அறிவித்தது.

யுத்தம் முடியாத நிலையில் பாதுகாப்பு இல்லாத நிலையில் இங்குவர விரும்பாத அகதிகள் பெயர் பதிவதற்கு மறுப்புத் தெரிவித்துவிட்டனர். இந்திய— இலங்கை அரசுகளின் பொறிக்குள் அகப்பட்டவர்கள், இந்தியாவால் ஏமாற்றப்பட்டவர்கள் இங்கு திரும்பிவர ஒப்புக்கொண்டனர். ஆனால் இப்போது அவர்களும் மறுப்புத் தெரிவிப்பதாகத் தகவல்கள் கிடைக்கின்றன!

ஆரம்பத்தில் அகதிகள் வரவேற்பு முதல் நிவாரணப்பணம் மீளக் குடியமரும் நிதி வழங்குவது வரை இலங்கை அரசு தடல்புடல் காட்டியது. பாரிஸில் இலங்கைக்கு உதவும் நாடுகளின் கூட்டம், கேட்டதை விட கூடுதல் நிதி உதவி வழங்கியதும்—தனது காரியம் முடிந்ததும்—நாடக வேடத்தை கலைத்திருக்கிறது!

அகதிகளை திரும்ப அழைப்பதில் இலங்கை அரசு அக்கறையும் ஆர்வமும் இழந்துவிட்டது.

550 தமிழ் அகதிகளை தலைமன்னாருக்கு அழைத்துவருவதை மூன்று தடவைகள் ஒத்திவைக்க வேண்டிய அளவுக்கு இலங்கை பின்னடிப்பது உண்மை நிலையைப் புகட்டுவதாகும்!

ஈழத் தமிழ் அகதிகளை ஏமாற்றி அவர்களின் சொந்த இடங்களுக்குப் பலிக்கடாக்களாக அனுப்பத் திட்டமிட்ட இந்தியாவை ஏமாற்றி விட்டது இலங்கை அரசு! தன்வினை தன்னைச் சுடும் என்பதைப் புண்ணிய பூமியாம் இந்தியாவை ஆளும் அரசாங்கம் உணர்ந்து கொள்ளாமல் போனதன் விளைவு இது!

மற்றவனை ஏமாற்ற நினைப்பவன் தானே ஏமாந்து போவான் என்பதற்கு இந்திய அரசே நல்ல உதாரணமாகி விட்டது. ஏமாற்றாதே ஏமாறாதே என்று தமிழகக் கவிஞன் பாடியது அவனது சொந்த இந்தியாவுக்கே மிகப் பொருத்தமாகிவிட்டது!

# அரசியல், அதிகாரப் பகிர்வில் பெண்களுக்கு இன்று சமபங்கில்லை

## அவர்கள் நிலை மேலும் மோசமடைகிறது

**சாவதேச பெண்கள் தினம் எதிர்வரும் மார்ச் 8 ஆம் திகதியாகும். அதற்கு முன்னர் இன்றைய உலகப் பெண்களின் பொதுவான நிலை குறித்து இங்கு ஆராயப்படுகிறது**

கலாநிதி நகுலேஸ் கதிர்காமநாதன்
(தலைவர், ஐ. நா. சங்க யாழ். பிரிவு)

''பெண்கள்-

உலகின் மொத்த சனத்தொகையில் சரி அரைப்பங்கினர்; அவர்கள் மூன்றில் இரண்டு பங்கு வேலைகளைச் செய்கின்றனர். ஆனால் உலகின் மொத்த கொடுப்பனவுகளில் 10 சதவீதத்துக்கும் குறைவாகவே பெண்கள் சம்பாதிக்கின்றனர். மேலும் உலகின் மொத்த நிலப்பரப்பில் ஒரு சதவீதத்திற்கும் குறைவான பரப்பளவே அவர்களுக்கு உடைமையாக உள்ளது.''

இக்கூற்று பல தடவைகள் திரும்பத் திரும்ப கூறப்பட்டுள்ளது.

எனினும் ஒப்பீட்டு அடிப்படையில் பெண்களின் சமத்துவமற்ற ஏழ்மையான நிலைமை உலகம் முழுவதிலும் உணரப்பட்டுள்ள போதிலும், அவர்களின் பரிதாப நிலை தொடர்ந்தும் மோசமாகவே உள்ளது.

வறுமை ஒழிப்பை நோக்கிய அபிவிருத்தி சித்தாந்தங்கள் அறுபதுகளிலிருந்து உருவாகி வந்துள்ளன. ஆயினும் 1982 இல் தொடங்கிய சர்வதேசக் கடன் குழப்பங்களும் சர்வதேச நாணய முறை சீர்குலைந்து விடுமோ என்ற அச்சமும், பெரும் பாதிப்பை ஏற்படுத்தி விட்டன. அதாவது பொருளாதார வளர்ச்சியையும் தடையற்ற பொருளாதாரச் சந்தையையும் அடிப்படையாகக் கொண்ட முன்னுதாரண அபிவிருத்தித் திட்டங்களை மீண்டும் ஆரம்ப நிலைக்கே இட்டுச் சென்று விட்டன.

இன்று, வளர்ச்சி என்பது, ஏற்றுமதி சார்ந்த உற்பத்தி, வெளி நம்பகத்தன்மை ஆகியவற்றுடன் இணைந்து அபிவிருத்திக் கொள்கைக்குப் பெரும் வழிகாட்டியாக இருக்கிறது.

நகரங்களிலும் சரி, கிராமங்களிலும் சரி பெண்கள் உணவு, போஷாக்கு, சுகவாழ்வு, பராமரிப்பு, கல்வி மற்றும் வருவாய் என்பவற்றை [குடும்பத்துக்கு] அளிக்க வேண்டிய நிலையில் இருப்பதன் காரணமாக தற்போதைய பொருளாதார நெருக்கடியால் அவர்கள் பல வழிகளிலும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

### வேலைவாய்ப்பு குறைதல்

மூன்றாம் உலக அரசாங்கங்கள், பெரும்பாலும் சர்வதேச நாணய நிதியத்தால் திணிக்கப்பட்ட, பொதுச் செலவுக் குறைப்புகளை செய்வதால், வேலைவாய்ப்புகள் குறைந்து பெண்கள் அவர்களது பாரம்பரியத்துக்குப் புறம்பான வேலைகளுக்குள் தள்ளிவிடப்படுகின்றனர்.

பாவனைப் பொருள்களின் விலை வீழ்ச்சியால் உற்பத்தியாளர்களுக்கு குறைந்த வேதனம் கிடைப்பதோடு, வளரும் நாடுகள் ஏற்றுமதிக்காக பணப்பயிர் அறுவடையை அதிகரிக்க நிர்ப்பந்திக்கப்படுவதால் பெண்களுக்கு வேலை அதிகரிக்கிறது. பெரும்பாலான சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு மேலதிக சம்பாத்தியம் கிடைப்பதில்லை என்பதுடன் தமது சொந்தக் குடும்பத்தின் தேவைகளுக்காக உணவு தயாரிக்க அவர்களுக்கு நேரமும் கிடைப்பதில்லை.

குடி தண்ணீர், உணவு, சுகாதாரம், கல்வி, பொதுப்போக்குவரத்து ஆகியவற்றுக்குவழங்கப்பட்ட மானியம் குறைக்கப்படுவதாலும் வளரும் நாடுகளில் தனிநபர் வருமானம் வீழ்ச்சியடைவதாலும் நிலைமையைச் சரிக்கட்ட, பெண்கள் மீது சுமத்தப்படும் பளு அதிகரிக்கின்றது.

### பெண்களின் வறுமை

தற்போது நிகழ்வது ஒரு சங்கிலித் தொடரான நிகழ்ச்சியாகும். உலக பொருளாதார நெருக்கடியின் தாக்கம் மூன்றாவது உலகிலுள்ள ஏழைகளுக்கு நகர்த்தப்பட்டு விடுகிறது. இந்தச் சங்கிலி பெண்களிலே முடிவுறுவதால் உலகில் வறுமை 'பெண்மைப் படுத்தப்படுகிறது' எனலாம்.

வரலாற்று ரீதியாக பெண்களின் நடவடிக்கைகளே நகர கிராமிய சமூகங்களை வாழ்வித்து வந்துள்ளன. உணவு உற்பத்தி, இனப் பெருக்கம், பிள்ளைப் பராமரிப்பு மற்றும் பொருளாதாரப் பெறுமதி வாய்ந்த வீட்டு வேலைகளைச் செய்தல் மூலம் வருவாயை உற்பத்தி செய்தல் ஆகியவை மட்டுமன்றி எரிபொருள், உணவு, குடி தண்ணீர் என்பவற்றைச் சேகரிப்பதன் மூலமும் பெண்கள் சமூக வாழ்வு நிச்சயமான தொன்றாக விளங்குவதற்கும் முக்கிய பங்காற்றியுள்ளனர்.

### அங்கீகாரம்

ஐ.நா.வினால் 'பெண்களின் தசாப்தம்' அனுஷ்டிக்கப்பட்ட 1975—1985 காலப் பகுதியில், குறிப்பாக கிராமப் பெண்களின் நிலை குறித்து அதிக கவனம் செலுத்தப்பட்டதன் விளைவாக பெண்களின் பன்முகக் கடமைகள் பரவலாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன. குறைந்த பட்சம் 50 சதவீதமான உணவு உற்பத்திக்குப் பெண்களே பொறுப்பானவர்கள் என்பதைப் பல ஆய்வுகள் வெளிப்படுத்தியுள்ளன.

அதே சமயம் சஹாராவை அண்டியுள்ள ஆபிரிக்கா போன்ற மூன்றாம் உலக நாடுகளில் 80 சதவீத உணவு உற்பத்திக்குப் பெண்களே பங்களிப்புச் செய்கின்றார்கள்.

1985 ம் ஆண்டில் உணவு விவசாய ஸ்தாபனம் (FAO) பெண்களின் பங்களிப்பு குறித்துப் பின்வருமாறு உறுதிப்படுத்தியது:

''மூன்றாம் உலக நாடுகளில் முக்கிய உற்பத்தி வளங்களிலும், சேவைகளிலும் பெண்களுக்கு வேண்டிய வசதி செய்வதில் முன்னேற்றம் இல்லாவிட்டால், விவசாய உற்பத்தியை கணிசமான அளவு அதிகரிப்பதும், கிராமங்களில் வறுமையை ஒழிப்பதும் இயலாத காரியம். விவசாய உற்பத்தியில் ஆண்களைப் பயன்படுத்துவதால் செலவு அதிகரிக்கும். இந்தப் பளுவை வளரும் நாடுகளால் தாங்க முடியாது'' — என்பதாகும்.

எனினும், ஆண்கள் மயமாக்குதலின் பின் விளைவு உணரப்பட்டுள்ள போதிலும், பெண்களுக்கு மேலும் பலமளிக்கும் நிலை இதுவரையில் ஏற்படுத்தப்படவில்லை,

### எதிர்த்தாக்கம்

சமூக வாழ்வில் பெண்களின் மைய நிலை அவர்களது தாழ்ந்த அந்தஸ்து, நாளாந்த வாழ்வில் அவர்கள் எதிர் நோக்கும் பல வகையான பாகுபாடுகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து இன்றைய முக்கிய பிரச்சினைகளிலும், அவற்றைத் தீர்ப்பதிலும் ஒரு வித்தியாசமான எதிர்த்தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

### தீர்மானம் எடுப்பதில் பங்கில்லை

இருந்தும் தற்காலப் பிரச்சினைகள் — பொருளாதார அரசியற் பிரச்சினைகள் இரண்டுமே — ஆண்களுக்குரியனவாகவே கருதப்படுகின்றன.

வடக்கிலும் சரி தெற்கிலும் சரி (வளர்ச்சி அடைந்த நாடுகளிலும், வளர்ந்து வரும் நாடுகளிலும்) நடைமுறையிலுள்ள சமூக — அரசியல் முறைகள் பெண்களை குடும்ப வாழ்வின் பிரத்தியேக பகுதிக்குத் தள்ளிவிட்டு, ஆண்களை தீர்மானமெடுக்கும் அதிகாரமுள்ள பொது வாழ்வுக்குக் கொண்டு வருகிறது. ஆண்களே தீர்மானங்களை எடுக்கிறார்கள்.

மேற்கூறியவற்றிலிருந்து ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையே அதிகாரப் பகிர்வில் சமநிலையற்ற தன்மை நிலவுவதற்கு உற்பத்தியின்மை காரணமல்ல என்பது தெரிகிறது.

அப்படியானால் அதற்குக் காரணம் என்ன?

இந்தக் கேள்விக்கு ஒரு பொதுவான சிந்தனையோ அல்லது விளக்கமோ விடையாக அமையாது.

எந்த ஒரு பொருளாதார முறையிலும் ஒப்பீட்டு அடிப்படையில் பெண்கள் வறுமை நிலையில் இருப்பதற்கு ஆண் மேலாதிக்கமே காரணம் என ஒரு சிலர் கூறுவர். வேறு சிலர் முதலாளித்துவ அமைப்பில் நிலவும் வகுப்பு கட்டமைப்பே பெண்களின் வறுமைக்குக் காரணம் என்பர்.

உலக திருச்சபைகள் கவுன்ஸிலைச் சேர்ந்த லியோன் ஜோன்ஸ் என்பவர்—

இது காரணமா அது காரணமா என்பதல்ல பிரச்சினை. பால் வேறுபாடு, இன வேறுபாடு ஒருபுறமும் வகுப்பு வேறுபாடு மறுபுறமும் ஒன்றையொன்று பலப்படுத்தும் வகையில் செயற்படுவதே இந்தச் சமநிலையற்ற தன்மைக்குக் காரணம் — என்று கூறுகிறார். ★

## கப்பல் புறப்பாடு

கொழும்புக்கு சிகிச்சை பெறத் தெரிவு செய்யப்பட்ட நோயாளரை ஏற்றிக்கொண்டு இன்று திங்கட்கிழமை 'குமண' கப்பல் புறப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# சித்த வைத்தியம் இந்தியாவை விட யாழ்ப்பாணத்தில் வளர்ந்துள்ளது

## அதனைக் காக்க வேண்டும் என்கிறார் அதிகாரி

யாழ்ப்பாணம், பெப் 24

சித்த மருத்துவம் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறது. தென்னிந்தியாவில் சித்த மருத்துவம் பெரிய அளவில் வளர்ச்சி கண்டுவிட்டதாகக் கூறமுடியாது. தென்னிந்தியாவில் மேற்கொள்ளப்படும் சித்த வைத்திய முறைகளிலும் பார்க்க மேம்பாடான, முன்னேற்றம் அடைந்த முறை யாழ்ப்பாணத்தின் சித்த வைத்தியர்களால் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. அவற்றைப் பேணி எதிர்காலச் சந்ததியினருக்கும் வழங்க வேண்டியது எமது கடமைகளில் ஒன்று.

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் மாற்று மருத்துவத் துறை பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி உரோமகேஸ்வரன் இவ்வாறு கூறினார்.

யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரியின் அலுவலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை காலை மாநகர ஆணையாளர் திரு. வே. பொ. பாலசிங்கம் தலைமையில் பாரம்பரிய வைத்திய முறைகளை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது.

இந்தக் கருத்தரங்கில்சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு வைத்திய கலாநிதி உரோமகேஸ்வரன் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தமது பேச்சில் மேலும் தெரிவித்ததாவது:

சித்தர்களால் உருவாக்கப்பட்டது சித்த வைத்திய முறை. சித்தம் என்பதற்கு வடமொழியில் பரிபூரணம் (Perfectness) என்ற கருத்து உண்டு.

சித்த வைத்தியம் குவிதல்-விரிதல் என்ற தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது.

பல இடங்களிலும் காணப்படும் மூலிகைகளைத் தேடியெடுத்து அவற்றை ஒன்றாக்கி (குவித்து) மாத்திரைகள் செய்யப்படுகின்றன. இம் மாத்திரைகள், தேன், இஞ்சிச் சாறு போன்ற அனுமானங்களில் சேர்த்து உரைக்கப்பட்டு உடலுக்குள் சென்று சேரும் போது விரிவடைகின்றன.

சித்த வைத்தியர்கள் முதலில் தன்னைப் படிக்க வேண்டும். தன்னிடம் சிகிச்சைக்காக வருபவர்களிடம் தனது ஆத்மாவைக் காணவேண்டும் அப்போது தான் சிகிச்சை சித்தியளிக்கும்.

ஒரு முறை ஆளுநர் நளின் செனவிரத்னா என்னிடம் சித்த வைத்தியத்துக்கும் ஆயுர்வேத வைத்தியத்துக்கும் உள்ள வித்தியாசம் என்ன என்று கேட்டார். ஆயுர்வேத வைத்தியத்தின் பட்டப் பின் படிப்புத் தான் (Post Graduate Study) சித்த வைத்தியம் என்று அவருக்குத் தெரிவித்தேன். உண்மையும் அதுவே — என்றார்.

கருத்தரங்கில் யாழ் மாநகரசபை சித்த ஆயுர்வேத வைத்தியப் பிரிவு பொறுப்பாளர் கலாநிதி இராமநாதன், யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை விரிவுரையாளர் கலாநிதி சிவசண்முகராஜா, யாழ் ஹோமியோபதி வைத்தியர் சங்கத் தலைவர் கலாநிதி கிருஷ்ணசாமி ஆகியோர் பல கோரிக்கைகளை முன்வைத்து உரையாற்றினார்கள்.

யாழ் மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி ஆர். தெய்வேந்திரன் பதிலுரை ஆற்றுகையில் —

மேலை நாட்டு வைத்திய முறையைப் பின்பற்றுவோரும் நமது நாட்டுப் பாரம்பரிய வைத்திய முறைகளைப் பின்பற்றுவோரும் ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டும் — எனக் கேட்டுக் கொண்டார், (அ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நகரில் கண்டனப் பேரணி

யாழ்ப்பாணம், பெப். 24

உணவு முத்திரையில் எட்டுப் புள்ளிகளுக்கு உணவுப் பொருள்களை வழங்காமல் அந்தப் புள்ளிகளை வெட்டி எடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதை ஆட்சேபித்து யாழ்ப்பாணத்தில் இன்று காலை கண்டன ஊர்வலம் ஒன்று நடத்தப்பட இருக்கின்றது.

சுருட்டுத்தொழிலாளர் சங்கமும், சுன்னாகம் வர்த்தகர் சங்கமும் இணைந்து இந்தப் பேரணியை ஒழுங்கு செய்துள்ளன.

பேரணி கொக்குவில் இந்துக் கல்லூரியில் இருந்து ஆரம்பமாகி யாழ். செயலகத்தைச் சென்றடையும். [ஒ-3]

# மரண அறிவித்தல்கள்

## கணபதிப்பிள்ளை இராமநாதன்

நெல்லியான், கழிபுரம் கணபதிப்பிள்ளை இராமநாதன் [இளைப்பாறிய இராணுவ அதிகாரி] அவர்களின் ஈமக்கிரியைகள் இன்று [திங்கட்கிழமை] முற்பகல் 10 மணியளவில் நெல்லியானிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சுழிபுரம் திருவடிநிலை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல் :

க. இந்திரராசா [சகோதரன்]
[ஆசிரியர்]

சுழிபுரம்.
[19843]

## சரவணமுத்து இராசலிங்கம்

கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த சரவணமுத்து இராசலிங்கம் 18 - 02 - 92 செவ்வாய்க்கிழமை காலமானார்.

இவர் அன்னலக்ஷ்மியின் அன்புக் கணவரும், சிறீக்குமார் (நோர்வே), ரஞ்சிதா தேவி, ரவீந்திரகுமார் (நோர்வே), நந்தினி தேவி (நோர்வே), மஞ்சுளா தேவி, நடராஜகுமார் (நோர்வே), உதயகுமார் (நோர்வே) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், காலஞ் சென்ற சின்னத்துரை, காலஞ் சென்ற ஆறுமுகம், அன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், பஞ்சதாசன் (லண்டன்), கமலேஸ்வரி (நோர்வே), தெய்வநிதி ஆகியோரின் மாமனாரும், லக்ஸன், கபிலன் ஆகியோரின் பாசமிகு பேரனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (24-02-92) திங்கட்கிழமை பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

இ. ரவீந்திரகுமார்.
(மகன்)

சேர்ச் லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.
[19834]

## திருமதி சந்தியாகோ அன்னம்மா

திருமதி அன்னம்மா 23-2-1992 இல் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற சந்தியாகோவின் அன்பு மனைவியும், அந்தோனிப்பிள்ளை, நீக்கிலாப்பிள்ளை [லிபியா] ஆகியோரின் தாயாரும், அஞ்சலின், புஸ்பா ஆகியோரின் மாமியாரும், ரகுறாஜ், ஷெனீக்கா [சுண்டிக்குளி மகளிர் கல்லூரி], டிலிசி, மரினா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 24-2-1992 [திங்கள்] காலை 9-00 மணிக்கு நல்லடக்கத்திற்காக கரவெட்டி சேமக் காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:

ச. அந்தோனிப்பிள்ளை

கரணவாய் கிழக்கு,
கரவெட்டி.
[19841]

## சரவணமுத்து நாகலிங்கம்
## [சாமியார்]

புங்குடுதீவு 3-ம் வட்டாரத்தைச் சேர்ந்த சரவணமுத்து நாகலிங்கம் [சாமியார்] கடந்த 21-2-1992 வெள்ளிக்கிழமை புங்குடுதீவில் காலமானார்,

இவர் புங்குடுதீவு சரவணமுத்துவின் அன்பு மகனும், சிரோன்மணியின் அன்புக் கணவரும், காலம்சென்ற சுப்பிரமணியத்தின் சகோதரனும், புனிதவதி, திருவாவினன்குடி [சுவிஸ்], சரவணபவானந்தன் [கொழும்பு], மோகனராணி, சிவகெங்கேஸ்வதி, தடாதகைப்பிராட்டி [அரசினர் வைத்தியசாலை, புங்குடுதீவு] ஆகியோரின் தகப்பனாரும், V. N, சண்முகம் [ரத்கம ஸ்ரோர்ஸ், கொழும்பு], திருவாக்கரசு [கிளிநொச்சி], சதானந்தலிங்கம் [கொழும்பு], திலகவதி, காந்திமதி, முத்துவேலு, தவமணி ஆகியோரின் மாமனாரும், காலம் சென்ற கௌரீசன், கௌரிசங்கர், கௌரிமனோகர், ஆனந்தகௌரி, மணிசேகரன், சிவமாறன், வாதவூரன், முரளிதரன், துர்க்கா, சிவதர்சினி, சிவபரன், சிவசிரோன், சிவகார்த்திகா, நாகசோதி, திருவாதவூரன், ஜீவதாரணி, பிரியதர்சினி, திருவருட்செல்வி, மோகனவதனி, கஜரூபன், வினோதினி, ஜெயரூபன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 21-2-1992 அன்று புங்குடுதீவில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்:

நா. தடாதகைப்பிராட்டி [மகள்]
அரசினர் வைத்தியசாலை, புங்குடுதீவு.

536/1, கே.கே. எஸ். றோட்,
யாழ்ப்பாணம்.
[19844]

# கிறிஸ்தவ...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

உடன்பட்டிருந்த பௌத்த மதகுரு ஒருவர் தனிப்பட்ட காரணங்களால் கடைசி நேரத்தில் குழுவில் சேர்ந்து கொள்ளமுடியாமற் போனதாகவும் அறியவந்தது.

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தைகளைத் தொடங்குவதற்கு முன்னோடியாக யுத்த நிறுத்தம் ஒன்றைக் கொண்டு வருவதற்கான முயற்சிகளில் ஈடுபடுவதே இவர்களின் விஜயத்தின் முக்கிய நோக்கமாகும்.

எனினும் வவுனியாவில் நேற்றிரவு முதல் ஊரடங்கு அமுலுக்கு வந்துள்ளதால், தூதுக் குழுவினரின் யாழ். விஜயம் திட்டமிட்டபடி நடைபெறுமா என்பது சந்தேகத்துக்கு உரியதாகிவிட்டதாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. [அ-3]

# யாழ். குடாநாடு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

படகுகளும் ஆழம் குறைந்த பரவைக் கடலிலும் வந்திறங்கக் கூடியவை. அவற்றை யாழ். குடாநாடு மீதான தாக்குதலின் போது பிரதானமாகப் பயன்படுத்தத் திட்டமிடப்பட்டிருந்தது.

சீனாவிடம் இருந்து வாங்கப்பட்ட இந்தப் படகுகளைத் திருத்துவதற்கு ஏற்கனவே அங்கிருந்து இரண்டு தொழில்நுட்பக் குழுக்கள் வந்திருந்தும் அவை இன்னும் இயங்கக்கூடிய நிலையில் இல்லையாம்.

கடந்த வெள்ளிக்கிழமையும் சீனாவைச் சேர்ந்த மற்றொரு பொறியியலாளர்கள் குழு கொழும்பு வந்து சேர்ந்தது. எனினும் படகுகளைத் திருத்தக் குறைந்தது மூன்று மாதங்களாவது செல்லும் எனக் கூறப்படுகிறது. [அ]

# தமிழர் கூட்டணி..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் இந்திய அரசு இரகசியப் பேச்சு நடத்தியது. இதனையடுத்து கூட்டணிக்கு 50 லட்சம் ரூபா [இந்திய நாணயம்] வழங்க இந்தியா முடிவு செய்தமி.

கூட்டணித் தலைவர் எம். சிவசிதம்பரம் மற்றும் எம். பிக்களான மாவை சேனாதிராஜா, ஜோசப் பரராஜசிங்கம் ஆகியோர் புதுடில்லி பாலம் விமான நிலையத்தில் வந்திறங்கியதும் இந்திய வெளிவிவகாரத்துறை அதிகாரிகள் அவர்களை இரகசிய இடம் ஒன்றுக்கு அழைத்துச் சென்றனர். பின்னர் வெளிவிவகார அமைச்சு அமைந்துள்ள ''சவுத் புளொக்'' கட்டடத்துக்கு அவர்கள் கூட்டி வரப்பட்டனர்.

தமக்கு 50 லட்சம் ரூபா வழங்கும்படி கூட்டணிக் குழுவினர் கேட்டனர் என்றும் அதனை வழங்க வெளிவிவகாரத்துறை அதிகாரிகள் ஒப்புக் கொண்டனர் என்றும் தெரிகிறது—என்று அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச் செய்தியை கூட்டணி எம்.பியான ஜோசப் பரராஜசிங்கம் மறுத்துள்ளார்.

கொழும்புப் பத்திரிகை ஒன்றுக்கு பேட்டியளித்த அவர், நிதி அளிக்கப்படுவது பற்றி வெளியான செய்தியை அடியோடு மறுத்தார். [உ]

# ஐ. நாவின்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

யானதும், அதற்கு வெளிநாட்டுச் செய்திச் சேவையினரும், வெளிநாட்டுப் பத்திரிகையாளரும் பெரும் முக்கியத்துவம் கொடுத்து செய்தி வெளியிட்டனர். [அ 10]

# சுப்புலக்ஷ்மியின் மகனையும் பொலீஸார் மிரட்டினர்!

சென்னை, பெப். 24

தி. மு. கவின் முன்னாள் அமைச்சர் சுப்புலக்ஷ்மியின் மகனையும் தமிழக 'கியூ' பிரிவுப் பொலீஸார் மிரட்டி வருகின்றனராம். சென்னைப் பத்திரிகை ஒன்று இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

பத்மநாபா மற்றும் அவரது சகாக்கள் கொலையுண்ட சம்பவம் தொடர்பாக சுப்புலக்ஷ்மி ஜெகதீசன் 'தடா' சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டிருப்பது தெரிந்ததே.

இவர்களது மகன் ஜெயப்பிரகாஷ், அண்ணாமலைப்பல்கலைக் கழக மருத்துவக் கல்லூரி மாணவராவார். அண்மையில் விடுமுறையில் ஈரோட்டில் உள்ள அவரது வீட்டுக்கு அவர் சென்றிருந்தார்.

அவ்வேளை அங்கு சென்ற 'கியூ' பிரிவுப் பொலீஸார் ஜெயப்பிரகாஷைத் தனியே அழைத்துப் பேசினர்.

''நாங்கள் கூறுகிறபடி உன் அப்பா, அம்மாவைக் கூறச் சொல். நாங்கள் எழுதித்தரும் பேப்பரில் அவர்களின் கையெழுத்துகளை வாங்கித் தா. இதைச்செய்யாவிட்டால் உன்னையும் 'தடா' சட்டத்தின் கீழ் கைது செய்வோம். உனது பெற்றோரையும் சிறையில் வைத்து செம்மையாக அடிப்போம்''—என்று கூறி ஜெயப்பிரகாஷை அவர்கள் மிரட்டினராம். தாங்கள் கூறியதைச் செயற்படுத்த சிலநாள் கால அவகாசம் வழங்கிவிட்டு அவர்கள் அங்கிருந்து சென்றனராம்.

# முதலுதவிப் பெட்டிகளை இங்கு எடுத்து வரவும் தடை!

யாழ்ப்பாணம், பெப். 24

ஐ. நா. சிறுவர் நிதியம் அன்பளிப்பாக வழங்கிய முதலுவிச் சிகிச்சைப் பெட்டிகள் சிலவற்றை யாழ்ப்பாணம் எடுத்து வருவதற்கு புனர்வாழ்வு அமைச்சு மறுப்புத் தெரிவித்ததாக அறியவருகிறது.

யாழ். மாநகரசபை எல்லைக்குள் உள்ள 64 சனசமூக நிலையங்களுக்கும், 12 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் அன்பளிப்பாக ஒவ்வொரு முதலுதவிப் பெட்டிகளை வழங்க ஐ. நா. சிறுவர் நிதியம் முன்வந்திருந்தது.

கூட்டுப்படைத் தலைமையகம் இந்த முதலுதவிப் பெட்டிகளை யாழ்ப்பாணத்துக்கு எடுத்துச்செல்ல அனுமதி வழங்கிவிட்டது. ஆனால் புனர்வாழ்வு அமைச்சு அனுமதி மறுத்து விட்டதாகக் கூறப்படுகிறது.

இதேபோன்று, றெட்பானா அமைப்பும் இங்கு முதலுதவிப்பெட்டிகளை எடுத்து வர இருந்தது. அந்த முயற்சியும் தடைப்பட்டு விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. [ஒ-3]

# மரண அறிவித்தல்கள்

## திருமதி நாகராசா பாக்கியம்

ஆலங்குழாய் சண்டிலிப்பாயைச் சேர்ந்த திருமதி நாகராசா பாக்கியம் நேற்றுக் காலமானார். இவர் காலஞ்சென்ற சின்னத்தம்பி நாகராசாவின் அன்பு மனைவியும், சோதிராசா [பொறியியலாளர், இங்கிலாந்து], செல்வராசா [மானிப்பாய் பரிஸ் ப. நோ. கூ. ச.], திருமதி ச. செல்வநாயகி [ஆசிரியர், சண்டிலிப்பாய் இ. ம. வித்.], திருமதி ந. இராஜலட்சுமி, விஜயராசா, சிவராசா [நில அளவையாளர்], சகுந்தலா தேவி, சந்திராணி ஆகியோரின் தாயாரும், க. சண்முகம், காலஞ்சென்ற றஞ்சித், சந்திரவர்ணன் [கி.சே. அ.], யோகலிங்கம், லலிதா [இங்கிலாந்து], தில்லைமலர், ஜெயராணி, கலாராணி ஆகியோரது மாமியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று பிற்பகல் 2 மணிக்கு சண்டிலிப்பாய் கொட்டுப்பனை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:

நா. செல்வராசா

[19846]

## திருமதி றோஸ் கனகம்மா றிச்சேட்ஸ்

நல்லூரைச் சேர்ந்த திருமதி றோஸ் கனகம்மா றிச்சேட்ஸ் அவர்கள் [23-02-92] ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

இவர் காலம் சென்ற Dr. D. C. றிச்சேட்ஸ் அவர்களின் அன்பு மனைவியும், காலம்சென்ற திருமதி லீலா அரியரட்ணம், காலம்சென்ற திருமதி பத்மா செல்வரட்ணம், திரு. டேவிட் கனகநாயகம், வண. பிதா. J. R. ரட்ணநாயகம். திரு. R. E. ஜெயராஜா, திரு. R. F. செல்வராஜா, திருமதி சீதா விஜயராஜா ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு. I. R. அரியரட்ணம், H. L. D. செல்வரட்ணம், திருமதி கமலினி கனகநாயகம், திருமதி லதிகா ரட்ணநாயகம், திருமதி பத்மினி ஜெயராஜா, திருமதி விமலராணி செல்வராஜா, Dr. சால்ஸ் விஜயராஜா ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் அடக்க ஆராதனை செவ்வாய்க்கிழமை [25-02-92] நாளை பிற்பகல் 2. 30 மணிக்கு 160, பழைய பூங்கா வீதி, சுண்டுக்குளியில் நடைபெற்ற பின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக நல்லூர் பரி. யாக்கோபு சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:

திரு. R. E. ஜெயராஜா

160, பழைய பூங்கா வீதி,
சுண்டுக்குளி.
[19845]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 24-2-1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org